விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 23
ஒலி 305 வள்ளுவர் ஆண்டு 2053 ஐப்பசி 03 வியாழக்கிழமை (20.10.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
1500/= + 500/=

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால்

# 8 தமிழ் அரசியல் கைதிகளுக்கு மன்னிப்பு

## தீபாவளியன்று ஐவரே விடுவிக்கப்படுவர் - சிறைச்சாலை ஆணையாளர்

(கொழும்பு) பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் நீண்டகாலமாக தடுத்து வைக்கப்பட்டிருந்த 8 தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப் படவுள்ளனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொது மன்னிப்பின் கீழ் தீபாவளி தினமன்று குறித்த கைதிகள் விடுதலை செய்யப்படவுள்ளனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

### மல்லாகம் சந்திப் பகுதியில்

## ஹெரோயின் போதையுடன் 3 இளைஞர்கள் கைது

(யாழ்ப்பாணம்)
யாழ் காங்கேசன்துறை விசேட குற்றத்தடுப்பு பொலி ஸாரினால் உயிர்க்கொல்லி ஹெரோயின் போதைப்பொரு ளுடன் மூன்று இளைஞர்கள் மல்லாகம் சந்திப்பகுதியில் நேற்று மாலை கைது செய்யப் பட்டுள்ளனர்.

பிரதான பொலிஸ் 11

### ஹெரோயின் விற்பனை செய்த

## 23 வயது பெண் அச்செழுவில் கைது

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் பொலிஸ் பிரி வுக்குட்பட்ட அச்செழுப் பகுதி யில் உயிர்க்கொல்லி போதை பொருள் விற்பனை யில் ஈடுபட்டு வந்த 11

### போதைக்கு அடிமையான

## 17 வயது மகனை திருத்தித் தாருங்கள்

### கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் மகனை ஒப்படைத்த தாய்

(யாழ்ப்பாணம்)
போதைக்கு அடிமையான தனது 17 வயது மகனை திருத்தி தருமாறு தாய் ஒருவர் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளார்.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உரும் பிராய் மேற்கு பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இளைஞன் ஒருவரை அவருடைய தாயார், கடந்த இரண்டு வருடங்களாக போதைப்பொருள் பாவனையில் இருந்து திருத்தித் தருமாறு கோப் பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி யிடம் நேற்றுக் காலை ஒப்படைத்துள் 11

### தவறான பொருளாதாரக் கொள்கையே

# நாட்டின் பாரிய இழப்புக்கு காரணம்

## கோட்டாவைச் சாடினார் ரணில்

- வரிகளை உயர்த்தாவிட்டால் வரிசை யுகம் உருவாகும்.
- இதைவிடவும் மிக கஷ்டமான காலத்தை எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும்.
- நாட்டுக்காக கடின தீர்மானங்கள் எடுக்கப்படும்.

(02ஆம் பக்கம் பார்க்க)



## மூளாயில் வீடு புகுந்து திருட்டு

(யாழ்ப்பாணம்)
வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூளாய் பகுதி யில் உள்ள வீடு ஒன்றிலிருந்து இலத்திரனியல் உப கரணங்கள் நேற்று 11

## இலங்கையின் கடன் மறுசீரமைப்புக்கு அமெரிக்கா தொடர்ந்து ஆதரவு

### ஜனாதிபதியிடம் அமெரிக்கப் பிரதிநிதி

(கொழும்பு)
கடன் மறுசீரமைப்பு தொடர் பாக சர்வதேச நாணய நிதி யத்துடனான பேச்சுவார்த்தை களில் இலங்கைக்கு அமெ ரிக்கா தொடர்ந்து ஆதரவளிக் கும் என அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய பிராந்தியங்களுக் கான உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ தெரிவித்தார்.



11

### கோப்பாயில்

## ஹெரோயினுடன் இளைஞன் கைது

(யாழ்ப்பாணம்)
20 மில்லி கிராம் ஹெரோ யின் போதைப்பொருளினை உடைமையில் வைத்திருந்த 22 வயதுடைய இளைஞன் ஒருவர் கோப்பாய் பொலிஸாரினால் 11

## கொடிகாமத்தில் திருட்டில் ஈடுபட்ட இளைஞன் கைது

### திருடப்பட்ட நகையும் மீட்பு

(யாழ்ப்பாணம்)
கொடிகாமத்தில் திருட்டில் ஈடுபட்டு வந்த இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்ட தோடு அவரிடம் இருந்து திரு டப்பட்ட நகைகளும் மீட்கப்பட்



11

### லங்கா சதொச நிறுவனத்தால்

## 6 அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)
லங்கா சதொச நிறுவனம் 6 அத்தியாவசிய நுகர்வோர் பொருட்களின் விலைகளை குறைக்கநடவடிக்கை எடுத்துள்ளது.

12

## 'பொன்னியின் செல்வன்' பார்த்த மகிந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகிறோம்



கிளி/முக்கொம்பன் மகா வித்தியாலயத்தில்

Best Wishes

வரலாற்றில் முதன்முறையாக
க.பொ.த. உயர்தரப் பரீட்சையில்
கலைப்பிரிவில் 3A பெறுபேற்றுடன்
கிளிநொச்சி மாவட்டத்தில்
முதல் நிலையினைப்
பெற்ற

செல்வன்
**ஏகாம்பரநாதன் முகிலன்**
அவர்களை

பாராட்டி வாழ்த்துவதோடு மேலும்
பல உயர்வுகளைப் பெற
வாழ்த்துகின்றோம். (C-5123)

பாடசாலைச் சமூகம்
கிளி / முக்கொம்பன் மகா வித்தியாலயம்

# வீடு விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு நந்தாவில் அம்மன் கோவிலுக்கு அருகில் 1 பரப்பு 15 குளியில் அமைந்த வடக்கு வாசல் புதிய வீடு உடன் விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு (13194)

**076 702 3565**

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் கைதடி A9 பிரதான வீதியுடன் 5 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. (நிலப்பரப்பு)**

- 18 அடி பாதையுடன் 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- திருமண மண்டபங்கள் அமைப்பதற்கும் அனைத்து விதமான வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் வீடுகள் கட்டுவதற்கும் உகந்த இடம்.

## பார்வையிடும் நேரம்

காலை 6.00 மணி முதல்
மாலை 6.00 மணிவரை

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு - **ஜெயம்** (13188)

**077 814 7389, 077 986 5457**

## நாட்டின் பாரிய...

வரிக் கொள்கை தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நேற்று புதன்கிழமை விசேட அறிக்கை ஒன்றை விடுத்து இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் முன்னெடுத்த தவறான பொருளாதாரக் கொள்கையால் நாடு 700 பில்லியன் ரூபாயை இழந்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கடந்த இரண்டரை வருடங்களில் 2,300 பில்லியன் ரூபாய் நாணயம் அச்சிடப்பட்டதால் பணவீக்கம் 70% ஆல் அதிகரித்துள்ளது என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நேரடி வரிகளை உயர்த்தி, நாட்டின் வருமானத்தை அதிகரிக்காவிட்டால், மீண்டும் வரிசையில் காத்திருக்கும் யுகம் உருவாகலாம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டின் வருமானத்தை அதிகரிக்காமல் பொருளாதாரத்தை பலப்படுத்த முடியாது என்றும் நாட்டை மீட்பதற்கு கடினமான தீர்மானங்களை எடுக்க வேண்டியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு அவசியம் என்பதனால் அவர்கள் அறிவித்தபடி ஆரம்ப வரவு - செலவுத் திட்டத்தில் மிகையை காண்பித்ததாக கூறியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் உத்தரவாதம் கிடைக்காமல் போனால், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட சர்வதேச நிறுவனங்கள் மற்றும் உதவி வழங்குவதாக கூறும் நாடுகளிடமிருந்து எமக்கு உதவிகள் கிடைக்காமல் போய்விடும். அவ்வாறு நிகழ்ந்தால், மீண்டும் வரிசைகளில் காத்திருக்கும் யுகத்துக்கே நாம் செல்ல நேரிடும்.


இதைவிடவும் மிக கஷ்டமான காலத்தை எமக்கு எதிர்காலத்தில் சந்திக்க நேரிடும். இந்தக் கடன்களைப் பெற்றுக் கொண்டு, கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை நாம் செயல்படுத்த வேண்டும். இவற்றை நாம் விரும்பிச் செய்யவில்லை. விருப்பமில்லாவிட்டாலும் கூட சில விடயங்களை எமக்கு செய்ய நேரிடுகிறது. என்றாலும் அந்த முடிவுகளை நாம் அவ்வப்போது பரிசீலித்து வருகின்றோம்.

கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்கும் அதே நேரம், பெரும்போகத்தில் மிகச் சிறந்த அறுவடையும் கிடைக்குமாக இருந்தால் அதன் மூலம் சிறந்த பொருளாதார நன்மைகளை ஈட்டிக்கொண்டு நாம் முன்னோக்கிச் செல்ல முடியும். அப்போது எமக்கு ஏற்பட்டிருக்கும் பொருளாதார அழுத்தம் குறைவடையும்.

அதேபோன்று நாம் வெளிநாட்டுக் கையிருப்பை அதிகரித்துக் கொள்வது தொடர்பிலும் கலந்துரையாடியுள்ளோம். இந்தச் செயற்பாடுகள் யாவற்றையும் முன்னெடுப்பதன் மூலம் எமக்கு முன்னோக்கிச் செல்லக்கூடியதாக இருக்கும்.

நாங்கள் தற்போது கடினமான காலகட்டத்திலேயே இருக்கிறோம். இதுபோன்ற கடினமான காலத்தில் நாம் கடினமான முடிவுக்களையும் எடுக்க நேரிடும். வேறு யாரும் முன்வராத நிலையிலேயே நான் இந்த கடினமான பொறுப்பை ஏற்றிருக்கிறேன் என்றார். (ம-7)

# துயர் பகிர்கின்றோம்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்
மருந்தாளர்களாக கடமையாற்றும்
திருமதி **வி. தர்சினி** அவர்களின் பாசமிகு தந்தையும்
திரு. **விஜிகரன்** அவர்களின் அன்பு மாமனாருமான

அமரர். **சுப்பிரமணியம் பொன்னம்பலம்**
( முன்னைநாள் புகையிரத திணைக்கள உத்தியோகத்தர் - அநுராதபுரம் )

அவர்கள் கடந்த 16.10.2022 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னாரின் மறைவிற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(13176)

**நிறைவு காண் மருத்துவவியல் தொழில் வல்லுனர்களின் ஒன்றியம்
யாழ்ப்பாணம்**

# மரண அறிவித்தல்

## திருமதி கனகரத்தினம் அருள்மலர்



அன்னையின் மடியில் : 07.12.1940
ஆண்டவன் அடியில் : 18.10.2022

தெல்லிப்பளை துர்க்காபுரம் ராமகிரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் அருள்மலர் அவர்கள் நேற்று முன்தினம் (18.10.2022) செவ்வாய்க்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் தெல்லிப்பளையைச் சேர்ந்த காலஞ்சென்ற இராஜசிங்கம் - மனோன்மணி தம்பதியரின் ஏகபுதல்வியும் புத்தூரைச் சேர்ந்த காலஞ்சென்ற காசிநாதர் - சரஸ்வதிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் கனகரத்தினம் (ஓய்வுபெற்ற உதவிப் பொதுமுகாமையாளர் - இலங்கை வங்கி) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற பிரியதர்சினி (UK) மற்றும் உதயதர்சினி, ஸ்ரீராகவன் (UK) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஜெகநாதன் (UK), குகபாலன், ரிஷா(UK) ஆகியோரின் அன்பு மாமியாரும் காலஞ் சென்றவர்களான இராஜமனோகரன், நித்தியானந்தன், Dr. தெய்வேந்திரம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் அநுஜன், பிரவின், சஸ்வின், சசிக்கா, சிவான் ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (20.10.2022) வியாழக்கிழமை பிற்பகல் 2.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பிற்பகல் 4.00 மணியளவில் தெல்லிப்பளை கட்டுப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

ராமகிரி,
காங்கேசன்துறை வீதி,
தெல்லிப்பளை.

021 205 9271
0044 1303279884
00447828528531

தகவல் :-
கணவர் - **கா. கனகரத்தினம்**
( ஓய்வுபெற்ற உதவிப் பொது முகாமையாளர் இலங்கை வங்கி ) (13177)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் கைதிகளின் குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை கொண்டு தீர்ப்பு வழங்குவதை ஏற்க முடியாது

## நீதியரசர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(அராலி)

**தமிழ் அரசியல் கைதிகளுக்கு பொலிஸாரால் வழங்கப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து நீதிமன்றங்கள் தீர்ப்பு வழங்குவதை ஏற்க முடியாது என பாராளுமன்ற உறுப்பினர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.**

கடந்த திங்கட்கிழமை தமிழரசியல் கைதிகளின் உறவினர்களை மெய்நிகர் வழியாக ஆளுநர் செயலகத்தில் சந்தித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,



பயங்கரவாத தடைச் சட்டம் அரசியல் கைதிகள் விடயத்தில் பாதகமான ஒரு சட்டமாக காணப்படுகின்ற நிலையில் அதனை நீக்க வேண்டும் என்பது அநேகமானவர்களின் நிலைப்பாடு. பயங்கரவாத தடைச் சட்டத்தில் கைது செய்யப்படுபவரை பொலிஸாரால் நீதிமன்றத்திற்கு வழங்கப்படுகின்ற குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை அடிப்படையாக வைத்து தீர்ப்புகள் வழங்கப்படுகிறது.

நான் நீதியரசர் ஆக இருந்த போது குற்ற ஒப்புதல் வாக்குமூலத்தை ஏற்க முடியாது என தீர்ப்பு வழங்கினேன். ஒருவர் தான் செய்தது குற்றம் என குற்ற ஒப்புதல் வாக்குமூலம் வழங்கினாலும் அக் குற்றத்தை அவர் செய்தாரா என்பது தொடர்பில், நீதிமன்றம் ஆராயும் கடப்பாடு உள்ளது.

சிறைகளில் உள்ள தமிழ் அரசிகள் கைதிகள் அநேகமானவர்கள் குற்றஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் வழக்குகள் இடம் பெற்று வரும் நிலையில் வழக்குகள் நிறைவடையும் சந்தர்ப்பங்களில் புதிய குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்து அவர் களை தொடர்ந்து தடுத்து வைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அறியப்படுகிறது.

ஆகவே பயங்கரவாத தடைச் சட்டத்தில் குற்ற ஒப்புதல் வாக்குமூலம் பெறப்படுவதற்கு சட்ட ஏற்பாடுகள் இருப்பினும் அதனை வியாக்கியானம் செய்ய நீதிபதிகளுக்கு உரித்து உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (4-104)



யாழ்.பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட வீதிப்போக்குவரத்து பொலிஸாரால், வீதி போக்குவரத்து விதிமுறைகள் மற்றும் போதைப்பொருள் பாவனையைத் தடுத்தல் தொடர்பாக மாணவர்களுக்கு தெளிவூட்டும் நிகழ்வு நேற்று முன்தினம் யாழ். இந்துக் கல்லூரியின் மகிழக அரங்கில் இடம்பெற்றது. (படம்:கஜிந்தன்)

# வல்வெட்டித்துறையில் முதியவர் மீது தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வல்வெட்டித்துறை பகுதியில் உள்ள வீடொன்றினுள் புகுந்த இருவர் வீட்டில் இருந்த முதியவர் மீது தாக்குதலை மேற்கொண்டதில் முதியவர் படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வல்வெட்டித்துறை, நாவலடி , ஊரிக்காடு பகுதியில் உள்ள வீடொன்றினுள் நேற்றைய தினம் அதிகாலை 2 மணியளவில், வாள் மற்றும் கோடரியுடன் புகுந்த இருவர் வீட்டில் இருந்த முதியவர் மீது தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதலுக்கு இலக்கான முதியவரின் அவலக் குரலைக் கேட்டு , அயலவர்கள் ஒன்று கூடிய வேளை தாக்குதலாளிகள் வீட்டை விட்டு தப்பியோடியுள்ளனர். தப்பியோடிய இருவரையும் அயலவர்கள் விரட்டிய போது , ஒருவர் அயலவர்களினால் மடக்கி பிடிக்கப்பட்டார். இருந்த போதிலும் மற்றையவர் தப்பியோடியுள்ளார். அயலவர்களால் மடக்கி பிடிக்கப்பட்டவர் வல்வெட்டித்துறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-33-60-104)

# பயிர்ச்செய்கையாளர்களுக்கு தற்காலிக காணித்துண்டுகள்

## வடமாகாண காணி ஆணையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்குள் ஏற்பட்டுள்ள உணவு நெருக்கடியினை தீர்ப்பதற்காக மக்களுக்கு விவசாய தேவைக்கு வழங்கப்பட்ட காணித்துண்டுகள், மத்திய வகுப்புத் திட்டத்தில் வழங்கப்பட்ட காணித்துண்டுகள், ஒதுக்குகள், மாகாண சபைக்குரிய காணித்துண்டுகள், அரச காணிகள் மற்றும் திணைக்களங்களுக்கு சொந்தமாக காணப்படுகின்றதுமான அபிவிருத்தியற்ற மற்றும் குறைந்த அபிவிருத்தியுடைய காணிகளையும் விவசாய நடவடிக்கைக்கு தற்காலிகமாக வழங்குவதற்கு காணி ஆணையாளர் நாயகத்தின் 2022/06 சுற்றுநிருபத்தின்படி தேசிய வேலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

இவ் வேலைத்திட்டம் நாடு பூராகவும் முன்னெடுக்கப்படுவதுடன் பொருத்தமான ஆர்வமுள்ள பயிர்ச்செய்கையாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. அத்துடன் பயிர்ச்செய்கை மேற்கொள்வதற்கு மட்டுமே இக் காணித்துண்டுகள் வழங்கப்படுகின்றது.

இதன் மூலம் பயிர்ச்செய்கை மேற்கொள்ள அனுமதி பெறுபவர்கள் காணிகளை சொந்தமாக்க முடியாது.

ஆர்வமுள்ள பயிர்ச்செய்கையாளர்கள் தங்களால் பொருத்தமான அபிவிருத்தியற்ற காணி இனங்காணப்படின் அக் காணிக்கான கோரிக்கையினை காணி அமைந்துள்ள பிரதேச செயலகத்தில் சமர்ப்பித்து உணவு உற்பத்திக்காக காணியினை பெற்றுக்கொள்ள முடியும் என வடக்கு மாகாண காணி ஆணையாளர் அறிவித்துள்ளார். (4)

# அதிபர் பதவிக்கான விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யா/எழுதுமட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம் வகை II, யா/நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம் வகை III, யா/கோவிலாக்கண்டி மகாலட்சுமி வித்தியாலயம் வகை III, யா/சரசாலை ஸ்ரீ கணேசா வித்தியாலயம் வகை III, யா/சாவகச்சேரி சக்தியம்மன் தமிழ் கலவன் பாடசாலை வகை III ஆகிய பாடசாலைகளில் காணப்படும் அதிபர் பதவி வெற்றிடத்தை நிரப்புவதற்கான விண்ணப்பங்கள் தென்மராட்சி கல்வி வலயத்தினால் கோரப்படுகின்றன.

இப்பதவிக்கு வடமாகாணத்தில் கடமையாற்றுகின்ற இலங்கை அதிபர் சேவை வகுப்பு-II ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்கள் மற்றும் வகுப்பு III ஐச் சேர்ந்த உத்தியோகத்தர்களிடமிருந்தும் பொருத்தமான பாடசாலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பிக்க விரும்புவோர் தத்தமது வலயக்கல்வி அலுவலகங்களில் விண்ணப்பங்களைப் பெற்று வலயக்கல்விப் பணிப்பாளரின் சிபாரிசுடன் 31.10.2022 ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு கிடைக்கக் கூடியதாக "வலயக்கல்விப் பணிப்பாளர், வலயக்கல்வி அலுவலகம், தென்மராட்சி, சாவகச்சேரி" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். விண்ணப்பதாரி ஆகக்குறைந்தது 3 வருட காலமேனும் சேவையாற்றக்கூடிய வயதெல்லையை உடையவராக இருத்தல் வேண்டும். (4)



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் தகைசார், வரலாற்றுத்துறைப் பேராசிரியர் சி.பத்மநாதனின் திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் பற்றிய மூன்று ஆய்வு நூல்களின் வெளியீட்டு விழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்றது. இந்து கற்கைகள் பீடத்தின் இந்து நாகரிகத்துறை ஏற்பாட்டில் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலைமையில் இடம்பெற்ற நூல் வெளியீட்டு விழாவில், யாழ். பல்கலைக்கழகத் தமிழ்துறை மேனாள் பேராசிரியர் சி. சிவலிங்கராஜா, வரலாற்றுத்துறை மேனாள் பேராசிரியர் ப. புஷ்பரட்ணம், யாழ்ப்பாண போதனா மருத்துவமனைப் பணிப்பாளர் மருத்துவர் த. சத்தியமூர்த்தி ஆகியோர் கருத்துரைகளை வழங்கினர். (படங்கள்: கஜிந்தன், சிவசாந்தன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்டாவது வருடத்தில்

**செந்தமிழன் STUDIO**

**வீடியோ & போட்டோ**



திருமண விழா
பிறந்தநாள் விழா
பூப்புனித நீராட்டு விழா

**உங்கள் மகிழ்வான தருணங்களை**
**விசேட விலைக்கழிவுடன்**
உடனுக்குடன் பெற்றுக்கொள்ளுங்கள்!

**நேரடி ஒளிபரப்பு**

***Live Telecast***

**உங்கள் இல்லத்து நிகழ்வுகளை**
**நேரலையாக ஒளிபரப்பு**
செய்திட அழையுங்கள்!

(13190)

**செந்தமிழன் ஸ்ருடியோ**
**077 6405572**
யாழ்ப்பாணம்-வவுனியா-கிளிநொச்சி
மன்னார்-முல்லைத்தீவு






உள்ளூராட்சி சபைகளின் பெண் உறுப்பினர்களுக்கான மூலோபாயத் திட்ட பயிற்சி நெறியில் வேலணை பிரதேச சபை பெண் உறுப்பினர்களால் முன்வைக்கப்பட்ட கோழி வளர்ப்பு செயற்பாட்டுக்கான திட்ட முன்மொழிவுக்கமைய முதற்கட்டமாக 45 பயனாளிகளில் 20 பயனாளிகளுக்கான கோழிக் குஞ்சுகள் மற்றும் உபகரணங்கள் நேற்று வேலணை பிரதேச சபையின் தவிசாளர் கருணாகர குருமூர்த்தி மற்றும் பெண் உறுப்பினர்களால் வழங்கி வைக்கப்பட்டது.

## ஓர் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் செல்வி

**வர்சிகா ரஞ்சன் சர்மா**

4 ஆம் வட்டாரம் முள்ளியவளை

ஆண்டொன்று ஆனாலும் ஆறமுடியவில்லையே
மீண்டும் பிறந்து வர ஆண்டவனை வேண்டுகின்றோம்
நீண்டு போகாமல் வாழ்வை நிறுத்திய வர்சிகாவிற்கு
நீண்ட வாழ்வு கிடைக்க வேண்டுகின்றோம்

செல்வி வர்சிகாவின் துயரத்தை போக்க முடியாது
தவிக்கும் எமது ரஞ்சன் சர்மா திருக்குடும்பம்
மீழவும் அமரர் வர்சிகாவின் ஆத்மா சாந்தி
பெறவும் எல்லாம் வல்ல இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம். (13192)

சிவஸ்ரீ அமிர்த ஸ்ரீகாந்த குருக்கள்
(ஸ்ரீவித்தியாபீடம் - துர்க்கை அம்மன்
தேவஸ்தானம் கிளிநொச்சி)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## பகிரங்க ஏலவிற்பனை அறிவித்தல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் பாவனையில் இல்லாத அலுவலகத் தளபாடங்கள், கணனி உபகரணப் பொருட்கள் மற்றும் பாவிக்கமுடியாத/ பாவனைக்குத் தேவைப்படாத பொருட்களை பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. எனவே ஆர்வமுள்ள ஏலதாரர்கள் ஏலவிற்பனைக்குரிய பொருட்கள் தொடர்பான விபரங்களை பல்கலைக்கழக பொது நிர்வாகக்கிளையில் தொடர்பு கொண்டு பின்வரும் தினத்தில் காலை 10.00 மணியிலிருந்து மாலை 02.00 மணிவரை பார்வையிடலாம்.

| இல | ஏலவிற்பனை நடைபெறும் இடம் | ஏலப் பொருட்கள் | ஏலப்பொருட்களை பார்வையிடும் நாள் | ஏலவிற்பனை நடைபெறும் திகதி / காலம் |
|---|---|---|---|---|
| 01 | பல்கலைக்கழக பிரதான வளாகம் (திருநெல்வேலி) | • தளபாடங்கள்<br>• ஆய்வுகூடப் பொருட்கள்<br>• அலுவலக உபகரணங்கள் | 25.10.2022 செவ்வாய்க்கிழமை மு.ப 10.00 மணி முதல் பி.ப 2.00 மணிவரை | 27.10.2022 வியாழக்கிழமை மு.ப 10.00 மணி |

ஏலவிற்பனையில் பங்குபற்ற விரும்பும் அனைவரும் அனுமதிக் கட்டணமாக ரூபா **2000.00ஐ** பல்கலைக்கழக காசாளரிடம் அல்லது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையில் **97000044001846** என்ற கணக்கிலக்கத்திற்கு நிதியாளர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் என்ற பெயரில் வைப்புச் செய்த பற்றுச்சீட்டுடன் உரிய விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பித்து சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக ஏலப்பொருட்களை பார்வையிடலாம்.

ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் பொருட்களைப் பார்வையிட்ட பின்னர் மீளளிப்பு செய்யக்கூடிய வைப்புத் தொகையாக ரூபா **15,000.00ஐ** **97000044002612** என்ற கணக்கிலக்கத்திற்கு வைப்புச் செய்து செலுத்திய பற்றுச்சீட்டினை 26.10.2022 மாலை 4.00 மணிக்கு முன்னர் நிர்வாகக்கிளையில் சமர்ப்பிப்பதன் மூலம் மேற்குறித்த தினத்தில் ஏலத்தில் கலந்து கொள்ளலாம்.

மேலும் 29.08.2022 மற்றும் 28.09.2022ஆம் திகதிகளில் நடைபெற்ற ஏலவிற்பனைக்காக மீளளிப்புச் செய்யக்கூடிய தொகையை இதுவரையில் பெற்றுக் கொள்ளாதவர்கள் அதனை இம்முறை மீளளிப்புச்செய்யக்கூடிய தொகையாக பயன்படுத்திக் கொள்ளமுடியும். இருப்பினும் அனுமதிக்கட்டணமான ரூபா 2000.00 ஐ செலுத்துதல் வேண்டும்

மேற்காட்டிய திகதியில் நடைபெறும் ஏலவிற்பனையில் வெற்றியடைந்தவர்கள் ஏலத்திற்குரிய தொகையினை பணமாக உடன் செலுத்தி பொருட்களை முழுமையாக உடன் எடுத்துச் செல்லுதல் வேண்டும்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**20.10.2022**

(C-5122)

## ஓராண்டு மறைந்தாலும் உள்ளத்து தேவதையே உன்னை எப்படி மறப்பது



அமரர்

செல்வி **வர்சிகா ரஞ்சன் சர்மா**

4 ஆம் வட்டாரம் முள்ளியவளை

*சிட்டே சிங்கார குயிலே மொட்டே மல்லிகை மொட்டே*
*பட்டாம் பூச்சியாய் பவனி வந்த உன் பாதையை*
*எட்டிப் பார்க்கின்றோம் ஏனம்மா மறைகிறாய்?*
*கட்டி அணைத்த அந்த சுகம் தான் எங்கே அம்மா!*

*முழு நிலவாய் பரந்தாய் முழு அழகையும் பெற்றாய்*
*வழு இல்லா உன் மொழி கேட்டு வளமாக வாழ்ந்தோமே*
*கழுவாக மரணம் வர கருகினோம் நாம் எல்லோரும்*
*தொழுகிறோம் வர்சிகா தோகை மயிலே எங்குற்றாய்*

குடும்பத்தினர்

(13192)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 4000 அதிபர்கள் நியமனம் விரைவில்-கல்வி அமைச்சர்

(கொழும்பு)

இலங்கை அதிபர் சேவை தரம் 3 இற்கான நியமனங்கள் விரைவில் வழங்கப்பட நடவடிக்கை எடுக்கப்படுவதாக கல்வி அமைச்சர் கலாநிதி. சுசில் பிரேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடமை நிறைவேற்று அதிபர்கள் மற்றும் 2019 இல் பரீட்சை எழுதி நியமனம் கிடைக்காதவர்கள் உட்பட மூன்று தரப்பினருக்கு இந்நியமனங்கள் வழங்கப்பட நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

கடமை நிறைவேற்று அதிபர்களுக்கு அரச சேவை ஆணைக்குழுவின் அனுமதியைப் பெற்று அதற்கான ஒழுங்கு முறையில் நியமனங்கள் வழங்க ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.



இதன் மூலம் சுமார் 4000 பேருக்கு நியமனங்கள் வழங்க தயாராக உள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நியமனங்களை அடுத்த கல்வி ஆண்டு ஆரம்பமாவதற்கு முன்னர், அதாவது 2023 மார்ச் மாதத்திற்கு முன்னர் வழங்குவதற்கு திட்டமிட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி)

# மஹாபொல உதவித்தொகையை அதிகரிக்க தீர்மானம்

(கொழும்பு)

மஹாபொல உதவித் தொகையை அதிகரிக்க திட்டமிடப்பட்டுள்ளதாக உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் சுரேன் ராகவன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் வர்த்தக அமைச்சு மற்றும் மஹாபொல நம்பிக்கை நிதியத்துடன் கலந்துரையாடி வருவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

மஹாபொலவில் சராசரி மாதாந்த உதவித்தொகை 5000 என உயர்கல்வி இராஜாங்க அமைச்சு தெரிவித்துள்ளது.

எனினும் நாட்டின் தற்போதைய சூழலை அடிப்படையாக கொண்டு இந்த தொகை ஜனவரி மாதம் முதல் 50% அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (நி)

# சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வு தாய்மொழியிலேயே நடத்தப்படும்

## விஜதாஸ ராஜபக்ஷ

(கொழும்பு)

சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வு தாய் மொழியிலேயே நடத்தப்படும் என நீதி அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

சட்டக்கல்லூரியில் எந்த மொழியில் கற்கைகள் நடத்தப்படும் என்பது தொடர்பாக பாராளுமன்றத்தில் நேற்று புதன் கிழமை கேள்வியெழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த நீதியமைச்சர் கலாநிதி. விஜதாஸ ராஜபக்ஷ, சட்டக்கல்லூரி நுழைவுத் தேர்வை ஆங்கில மொழியில் நடத்தலாம் என சட்டக் கல்வி ஆணைக்குழு தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டார்.

எனினும் கற்கை நடவடிக்கைகள் ஆங்கிலத்தில்தான் நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (நி)

# ஐ.எம்.எப் இன் கொள்கைக்கு இணங்க இலங்கைக்கு உதவத் தயார்

(கொழும்பு)

இலங்கைக்கு ஆதரவளிக்க அர்ப்பணிப்புடன் இருப்பதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சிரேஷ்ட தூதுவர்களான பீட்டர் ப்ரூயர், மசா ஹிரோ நோசகி ஆகியோர் பிரத்தியேகமாக தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர்.

சர்வதேச நாணய நிதியம் இலங்கை மக்கள் எதிர்கொண்டுள்ள நெருக்கடியின் தாக்கம் குறித்தும் குறிப்பாக ஏழைகள் மற்றும் நலிவடைந்தவர்கள் மீது ஆழ்ந்த கவலை கொண்டிருப்பதாக அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

சர்வதேச நாணய நிதியத்தின் கொள்கைகளுக்கு இணங்க இந்த இக்கட்டான நேரத்தில் இலங்கைக்கு ஆதரவளிக்க சர்வதேச நாணய நிதியம் உறுதி பூண்டுள்ளதாக அவர்கள் இருவரும் குறிப்பிட்டுள்ளனர். (நி)

## யாழுக்கான விமான சேவைகள்

# முன்னெடுக்கப்படாமைக்கு இந்திய நிறுவனங்களே காரணம்

(கொழும்பு)

யாழ்.விமான நிலைய சேவையை இம்மாத இறுதிக்குள் முன்னெடுக்கவுள்ளதாக துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

நேற்று சபை அமர்வில் பாராளுமன்ற உறுப்பினர் புத்திக பத்திர, யாழ்.சர்வதேச விமான நிலையத்தின் மேலதிக அபிவிருத்தி நிறுத்தப்படுமா? இல்லை முன்னெடுக்கப்படுமா எனக் கேள்வியை எழுப்பிய போதே நிமல் சிறிபால டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழுக்கான சேவைகளை முன்னெடுப்பதாக சில இந்திய விமான நிறுவனங்கள் அறிவித்திருந்தன. எனினும் வான் போக்குவரத்து சார்ந்த தொழில்நுட்ப சிக்கல்களை காரணம் காட்டி குறித்த நிறுவனங்கள் அதனை பிற்போட்டு வருகின்றன.

எனினும் இந்த மாத இறுதிக்குள் சில விமானங்கள் யாழ்.விமான நிலையத்திற்கு சேவையை முன்னெடுப்பதாக தெரிவித்ததாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)


# கண்ணீர் காணிக்கை

அமரர்.திருமதி.

சற்குணதேவி இராசலிங்கம்

எமது பாடசாலை ஆசிரியர்

(வணிகக்கல்வியும் கணக்கீடும்)

தோற்றம் 18.11.1971 | மறைவு 19.10.2022



அமரர்.திருமதி.சற்குணதேவி இராசலிங்கம் அவர்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவின் துயரில்
பாடசாலைச் சமூகம்,
யா/கந்தரோடை
தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.

(13183)


# இராசிபலன்

20.10.2022
ஐப்பசி 03, வியாழக்கிழமை
தசமி பிற்பகல் 3.10 மணிவரை

ஆயிலியம் முற்பகல் 10.26 மணிவரை
சுபநேரம் -7.32-9.02 மணிவரை
இராகுகாலம்- 1.32-3.02மணிவரை

சித்தாமிர்தம்
சந்திராஷ்டமம் -உத்தராடம், திருவோணம்

வளவன்




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, இனிமையான நாள்.




காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், வழிபாடு காரிய வெற்றி தரும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள், போசன சுகமுண்டு.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு.




நண்பர்கள் ஒளிவு மறைவின்றி பழகுவார்கள், திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, போசன சுகமுண்டு.




சுபவிரயங்கள் அதிகரிக்கும் நாள், அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயமும் பெறுவீர்கள், மனதில் தேவையற்ற சஞ்சலங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், பொது வாழ்வில் புகழ் கூடும் நாள்.




தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், சேமிப்புகள் உயரும் வாய்ப்புண்டு, மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.





உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் அகலும், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றை செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படலாம், களஸ்திர நன்மையுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புக்கள் அகலும், உறவு பகை பாராமல் ஒற்றுமையாக இருக்கும் நாள், செய்தொழிலில் முன்னேற்றம் காணும் நாள்.

இதயத்தை நெறிப்படுத்தும் ஆற்றல் மனதிற்குண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு யாழ்.பொதுநூலகம் வழங்கும் ஆக்கங்கள்

### புதிர் கணக்குகள்

#### எந்தப் பக்கம் விழும்

தெற்கு வடக்காகக் கட்டப்பட்ட ஆறு அடி உயரம் உள்ள மதிலின் மீது ஒரு சேவல் அமர்ந்துள்ளது. அதன் தலை கிழக்கு நோக்கியும் பின் பகுதி மேற்கு நோக்கியும் உள்ளது. இது இடும் முட்டை எந்தப் பக்கம் விழும்.

சேவல் முட்டை போடாது.

#### போக ஒரு நேரம் வர ஒரு நேரம்

யாழில் இருந்து வவுனியாவுக்கு ஒரு கார் இரண்டரை மணிநேரத்தில் வந்து சேர்ந்தது. ஆனால் அதே கார் வவுனியாவில் இருந்து யாழிற்குச் செல்ல நூற்றைம்பது நிமிடங்கள் ஆயிற்று. காரின் வேகமும் குறையவில்லை. வழியில் தடங்கள் எதுவும் ஏற்படவில்லை. அவ்வளவு நேரமானதற்கு என்ன விளக்கம் தர முடியும்?

150 நிடமிடங்கள் என்பது இரண்டரை மணி நேரம் தான்.

## மறைத்து வைத்த புதையல்



ஒரு ஊரில் வயதான விவசாயி இருந்தார். அவரது மகன்களோ விவசாயத்தில் ஆர்வமின்றி இருந்தனர். தனக்குப் பிறகு அவர்கள் சம்பாத்தியம் இல்லாமல் துன்பப்படுவார்களே என அவர் கவலைப்பட்டார்.

அவர்களை விவசாயத்தில் ஈடுபடுத்துவதற்காக அவர் ஒரு தந்திரம் வகுத்தார். இறக்கும் தருவாயில் இருந்த போது அவர்களை அழைத்தார்.

வயலில் ஒரிடத்தில் தான் மிகப்பெரிய புதையலை புதைத்து வைத்திப்பதாகச் சொன்னார்.

அவர் இறந்த பின்னால் அவர்கள் மண்வெட்டி, கடப்பாறைகளை எடுத்துக் கொண்டு வயலுக்குச் சென்று ஆழமாகத் தோண்டினர். அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை. ஆனால் மண் நன்கு பண்படுத்தப்பட்டதால் அந்த ஆண்டு நல்ல விளைச்சல் ஏற்பட்டு அதன் மூலம் நல்ல பண வரவு அவர்களுக்கு வந்தது.

# சிலப்பதிகாரம்

## கற்புக்கரசிக்குக் கோயில்

மாடலன் கமண்டலத்திலிருந்து நீரை எடுத்து அந்தச் சிறுமியர் மேல் தெளித்தான். அவர்கள் கோவலனின் தாய், கண்ணகியின் தாய் மற்றும் மாதரியின் உருவத்தைப் பெற்றார்கள்.

விழா இனிதே முடிந்தது. எல்லோரும் புறப்பட்டார்கள்.

செங்குட்டுவன் மாடலினிடம் நெகிழ்ச்சியாகப் பேசினான். கண்ணகிக்குக் கோயில் கட்டிவிட்டோம். ஆனால் அவளுடைய கதையில் இன்னும் எத்தனையோ உயர்ந்த மனிதர்கள் தொடர்பும் இருக்கிறது. அவர்களைப் பற்றியும் பிற்கால சந்தியினருக்குத் தெரிய வேண்டாமா? என்று கேட்டான்.




'அவசியம் தெரிய வேண்டும் அரசே!'

'எனவே கண்ணகியின் கதையை காப்பியமாக யாரேனும் எழுதி வைத்தால் எத்தனை சிறப்பாக இருக்கும்'

'எழுதலாம், யாரேனும் நிச்சயம் எழுதுவார்கள் .அது உங்கள் தம்பி இளங்கோவாகக்கூட இருக்கலாம்.' என்றான் மாடலன்

ஆனால் இளங்கோவடிகள் அப்படி ஒரு காப்பியம் எழுதுவரானால் அவர் துறவறம் மேற்கொண்ட நோக்கமே பொய்த்துவிடும்'

'அது எப்படி'

அவர் எதற்காகத் துறவறம் மேற் கொண்டார்?

'அவர் நாட்டை ஆளப் போகிறார் என்று ஜோதிடம் சொன்னது. அந்தப் பலன் பொய்யாக வேண்டும் என்பதற்காக இளங்கோ துறவறம் பூண்டார். இது எல்லோருக்கும் தெரிந்த கதைதானே?

'ஆமாம் அரசே ஆனால் இளங்கோவடிகள் கண்ணகி கதையை எழுதினால் அந்த ஜோதிடம் நிச்சயம் பொய்க்காது. உண்மையாகிவிடும்.'

அதுதான் எப்படி என்றேன்.

'அந்தக் காப்பியத்தின் மூலம் அவர் சேர நாடு மட்டுமல்லாது இந்த உலகம் முழுவதும் இருக்கும் தமிழர்கள் எல்லோருடைய நெஞ்சங்களிலும் பல நூறு வருடங்கள் ஆட்சி செய்வார். அப்போது அவரைப் பற்றிய ஜோதிடம் சரி என்று தானே அர்த்தமாகும்?'

செங்குட்டுவன் மனத் திருப்தியுடன் புன்னகை பூத்தான். (முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 06





என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதை அறிந்து கொள்ள அவனுக்கு ஆவல் பீறிக்கொண்டு எழுத்தது. அந்த ஆவலை அடக்கிக் கொள்ள அவனால் முடியவில்லை.

கூட்டத்துக்கு வெளியில் சாலை ஓரமாகக் குதிரையை நிறுத்தி விட்டுக் கீழே இறங்கினான். குதிரையை அங்கேயே நிற்கும்படி தட்டிக் கொடுத்துச் சமிக்ஞையால் சொல்லிவிட்டுக் கூட்டத்தைப் பிளந்து கொண்டு உள்ளே போனான்.

அங்கே விவாதத்தில் ஈடுபட்டிருந்தவர்கள் மூன்றே பேர்தான் என்பதைப் பார்க்க அவனுக்கு வியப்பு ஏற்பட்டது. ஆனால் விவாதத்தில் ஈடுபட்டவர்கள் மூன்றே பேர்தான் என்றாலும், கூட்டத்திலிருந்தவர்கள் பலர் அவ்வப்போது அவரவர்களுக்கு உகந்த வாதக்காரரின் கட்சியை ஆதரித்துக் கோஷங்களைக் கிளப்பினார்கள். அதனாலேதான் அவ்வளவு சத்தம் எழுந்தது என்பதை வந்தியத்தேவன் தெரிந்து கொண்டான். பிறகு என்ன விவாதம் நடைபெறுகிறது என்பதைக் கவனித்தான்.

வாதமிட்ட மூவரில் ஒருவர் உடம்பெல்லாம் ஊர்த்வபுண்ட்ரமாகச் சந்தனம் அணிந்து தலையில் முன் குடுமி வைத்திருந்த வைஷ்ணவ பக்த சிகாமணி கையில் அவர் ஒரு குறுந்தடியும் வைத்திருந்தார். கட்டையாயும் குட்டையாயும் வைரம் பாய்ந்த திருமேனியுடன் விளங்கினார்.

இன்னொருவர் தமது மேனியெல்லாம் பட்டை பட்டையாய்த் திருநீறு அணிந்திருந்த சிவபக்தர். மூன்றாவது மனிதர் காவி வஸ்திரம் தரித்துத் தலையையும் முண்டனம் செய்து கொண்டிருந்தார். அவர் வைஷ்ணவரும் அல்ல, சைவரும் அல்ல. இரண்டையும் கடந்தவரான அத்வைத வேதாந்தி என்று தெரிய வந்தது. சைவர் சொன்னார்:

" ஓ, ஆழ்வார்க்கடியான் நம்பியே! இதற்கு விடை சொல்லும்! சிவபெருமானுடைய முடியைக் காண்பதற்குப் பிரம்மாவும் அடியைக் காண்பதற்குக் திருமாலும் முயன்றார்களா, இல்லையா?

அடியும் முடியும் காணாமல் இருவரும் வந்து சிவபெருமானுடைய பாதங்களில் சரணாகதி அடைந்தார்களா, இல்லையா? அப்படியிருக்கச் சிவபெருமானைக் காட்டிலும் உங்கள் திருமால் எப்படிப் பெரிய தெய்வம் ஆவார்."

(தொடரும்...)



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 104

திங்களன்று (2022-02-28) உக்ரைனின் சுமி பிராந்தியத்தில் உள்ள ஒக்திர்காவில் எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையை அழித்த வெடிப்பு ஒரு தெர்மோபரிக் ஆயுதத்தால் ஏற்பட்டது என்று கூறப்படுகிறது. இருப்பினும் இது இன்னும் உறுதி செய்யப்படவில்லை.

பரவலாக தடைசெய்யப்பட்ட கிளஸ்டர் குண்டுகள் போரில் பயன்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது. வடகிழக்கு உக்ரைனில் உள்ள ஒரு பள்ளிக்கூடத்தை ரஷ்யா தாக்கியதாக சர்வதேச மன்னிப்பு சபை குற்றம் சாட்டியுள்ளது.

சுற்றுப்புற காற்றில் இருந்து ஒக்ஸிஜனை உறிஞ்சி அதிக வெப்பநிலை வெடிப்பை உருவாக்கும் தெரமோபரிக் ஆயுதங்களை மனித உரிமை அமைப்புகள் எதிர்க்கின்றன.

ஆனால் இந்த ஆயுதங்கள் எப்படிப்பட்டவை? அவை ஏன் அச்சத்தை ஏற்படுத்துகின்றன? என்பதை பிபிசி பாதுகாப்பு செய்தியாளர் ஃபிராங்க் கார்ட்னர் விளக்கினார். "அவர்களின் (ரஷ்ய) ஆயுதக் களஞ்சியத்தில் உள்ள மிகவும் சக்தி வாய்ந்த, அணுவாற்றல் அல்லாத ஆயுதம் இது" என்று அவர் கூறினார்.

**வேக்யூம் குண்டுகள் எவ்வாறு வேலை செய்கின்றன?**

தெர்மோபரிக் வெடிபொருட்கள் என்றும் அழைக்கப்படும் வேக்யூம் குண்டுகள் இரண்டு நிலைகளில் வேலை செய்கின்றன.

முதல் நிலையில் வெடிக்கும் மின்னூட்டமானது, எரிபொருளை சிதறடித்து மேகத்திரள் போன்ற ஒன்றைத் தோற்றுவிக்கும். இது கட்டடங்களுக்குள் நுழையும். பொருட்களைச் சுற்றி வளைக்கும். இரண்டாம் நிலை, இந்த மேகத்திரள் பற்றும். இது ஒரு பெரிய நெருப்புப் பந்தை ஏற்படுத்துகிறது.

**உக்ரைனில் நடந்த சண்டையில் ரஷ்யா தெர்மோபரிக் ஆயுதம் அதாவது வேக்யூம் வெடி குண்டைப் பயன்படுத்தியதாக மனித உரிமைக் குழுக்களும் அமெரிக்காவுக்கான உக்ரைன் தூதரும் குற்றம் சாட்டினர்.**

சுற்றியுள்ள பகுதிகளில் இருந்து ஒக்ஸிஜனை உறிஞ்சி அதிர்வு அலையை ஏற்படுத்துகிறது. "ஒரு சாதாரண வெடிபொருளின் எடையில் 30% எரிபொருளாகவும் 70% ஆக்சிடைசராகவும் இருக்கும். ஆனால் தெர்மோபரிக் வெடிமருந்தில் முழு எடையுமே எரிபொருளாக இருக்கும். அது காற்றில் உள்ள ஒக்ஸிஜனைப் பயன்படுத்துகிறது. எனவே அவை மிகவும் சக்திவாய்ந்தவை," என்று ராயல் யுனைடெட் சர்வீசஸ் இன்ஸ்டிட்யூட்டின் ரிசர்ச் ஃபெலோ, ஜஸ்டின் ப்ரோங்க் குறிப்பிட்டார்.

**விளைவுகள் என்ன?**

இதன் வெப்பம் மற்றும் அழுத்தத்தின் விளைவுகள் மிகவும் வலிமையானவை. ஆரம்ப வெடிப்பில் சிக்கிய எவரும் உடனடியாக ஆவியாகி விடுவார்கள். சுற்றியுள்ள பகுதியில் மாட்டிக்கொள்ளும் எவருக்கும் அதிர்ச்சி அலை காரணமாக கடுமையான உள் காயங்கள் ஏற்படும்.

அவை மிகவும் சக்தி வாய்ந்த குண்டு வெடிப்பு அலைகளை உருவாக்குவதன் மூலம், உடல் உறுப்புக்களை சிதைக்கும் மற்றும் நுரையீரலை கிழிக்கும் அல்லது வெடிக்கச்செய்யும்," என்று ப்ரோங்க் கூறினார்.

"இந்த அதிர்ச்சி அலையானது மூடியிருக்கும் இடங்களில் பரவும். எனவே பாதாள அறைகள் அல்லது குகைகள் போன்ற இடங்களில் ஒழிந்து கொண்டிருக்கும் மக்களுக்கு இது மிகவும் ஆபத்தானது. அவை பல ஆயிரம் டிகிரி வெப்பநிலையை உருவாக்குகின்றன. இது பயங்கரமான தீக்காயங்களை ஏற்படுத்தும்."

(தொடரும்)

## தெர்மோபாரிக் ஆயுதங்கள் எவ்வாறு வேலை செய்கின்றன




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களத்தை வைத்து தேசியம் பேசி

## எந்தப் பயனுமில்லை-எதிர்க்கட்சித் தலைவர்

**(கொழும்பு) பாலர் பாடசாலையில் இருந்து ஆங்கிலக் கல்வியை ஊக்குவிக்க ஒரு பொறிமுறையை உருவாக்குங்கள். சிங்களம் சிங்களம் எனக் கத்தி எந்தப் பயனும் இல்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**



நேற்றைய சபை அமர்வில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், நாட்டின் 56 வருட சாபம் சும்மா விடாது. அதை இன்றிலிருந்து இல்லாமல் செய்வோம். சிங்களம் சிங்களம் என்று சொல்லி ஒன்றையும் காண வில்லை.

சிங்களத்தை வைத்து தேசியம் பேசி எந்தப் பலனும் இல்லை. ஆகவே அரச கரும மொழிகளாக தமிழ், சிங்களம் இருக்கட்டும். எங்கே சென்றாலும் தற்போது ஆங்கிலம் தேவைப்படுகிறது.

ஆகவே பாலர் பாடசாலையிலிருந்து ஆங்கிலக் கல்வியை வளர்க்க ஒரு பொறிமுறையை உருவாக்குங்கள்.

மேலும் சிறந்த விஞ்ஞானிகளின் பட்டியலில் எமது சன்ன ஜனசுமணவின் பெயரும் உள்வாங்கப்பட்டுள்ளதாக அறிகின்றோம். அவருக்கும் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றோம் என அவர் தெரிவித்தார். (ந)

# இலங்கை வந்த டொனால்ட் லூவை வரவேற்றார் அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவி இராஜாங்க செயலாளர் டொனால்ட் லூ நேற்று இலங்கை வந்தடைந்தார்.

இலங்கை வந்திறங்கிய டொனால்ட் லூவை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சுங் வரவேற்றுள்ளார்.

இதனை அமெரிக்கத் தூதுவர் டுவிட்டரில் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா-இலங்கை உறவுகள் மற்றும் இலங்கையின் பொருளாதார நிலைமை குறித்து கலந்துரையாடுவதற்காக அவர் இந்த விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

மேலும் பிராந்திய பாதுகாப்பு, மனித உரிமைகள் தொடர்பாக டொனால்ட் லூ ஜனாதிபதி உள்ளிட்ட முக்கிய அதிகாரிகளைச் சந்தித்து கலந்துரையாடுவர் என எதிர்பார்க்கப்படுகின்றது. (ந)


## வேலை வாய்ப்பு

முன்னணி நிதி நிறுவனம் ஒன்றின் நெல்லியடி கிளையில் குறைந்தளவு வெற்றிடங்களுக்கான நேர்முக தேர்வு நடைபெற உள்ளது

தகைமை:- A/L Completed

- ❖ வடமராட்சி பகுதியில் உள்ளவர்கள்.
- ❖ நிதியியற் துறையில் ஆர்வம் உள்ளவர்கள்.
- ❖ ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு முன்னுரிமை.
- ❖ பல்கலைக்கழக கல்விச் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களுக்கு பகுதி நேர வேலைவாய்ப்பு.
- ❖ Single Mothers அனைவருக்கும் வேலை வாய்ப்பு.

தொடர்புகளுக்கு

077 263 1426 (13186)


# உணவு வழங்கிய எஜமானுக்கு அஞ்சலி செலுத்திய குரங்கு

## மட்டக்களப்பில் மனதை நெகிழ வைத்த சம்பவம்



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு தாளங்குடா பிரதேசத்தில் குரங்கு ஒன்று எஜமான் உயிரிழந்ததையடுத்து அவரின் சடலத்தில் ஏறி அவரை கட்டியணைத்து அழுது புலம்பியதுடன் அவரின் இறுதிக்கிரியை நடந்த மயானத்திற்குச் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்திய சம்பவம் அனைவரையும் கண்கலங்க வைத்ததுடன் பெரும் ஆச்சரியத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

தாளங்குடா பிரதேசத்தினைச் சேர்ந்த 56 வயதுடைய இரு பிள்ளைகளின் தந்தையான பீதாம்பரம் ராஜன் காட்டில் இருந்து வந்த குரங்கு ஒன்றிற்கு உணவு வழங்கி வந்துள்ளார்.

குறித்த குரங்கும் தினமும் அவரது வீட்டிற்கு வந்ததும் அவர் அதற்கு பிஸ்கட்களை வழங்குவதுடன் அவரின் விசேட தேவையுடைய பிள்ளையை அறையில் இருந்து குரங்கு இழுத்து வந்து அந்த பிள்ளையுடன் பிஸ்கட் சாப்பிடுவது வழக்கம். இந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இரவு சுகயீனம் காரணமாக அவர் திடீரென உயிரிழந்துள்ளார். இந்நிலையில், அவரின் வீட்டில் இறுதிக்கிரியைகள் செய்வதற்கு உறவினர்கள் சடலத்தை கொண்டு வந்து வைத்தபோது அங்கு வந்த குரங்கு அவர் சடலமாக இருப்பதை பார்த்து அவரின் பக்கம் சென்று அவருக்கு மூச்சு உள்ளதா என சோதித்து அவரின் கழுத்து சட்டையை பிடித்து இழுத்து அவரை எழுப்புவதற்கு பல முயற்சிகளை செய்தது.

ஆனால் அவர் படுக்கையில் இருந்து எழும்பாததையடுத்து குரங்கு கண்ணீர் விட்டு அழுததுடன் அவரின் காலை தொட்டு கும்பிட்டு அவரின் அருகில் தொடர்ந்து அமர்ந்தது. அங்கு இறுதிக்கிரியையில் கலந்துகொள்ள வந்த உறவினர்கள் குரங்கின் செயலைக் கண்டு கண்ணீர் விட்டு அழுததுடன் குரங்கு அருகில் இருந்து செயற்பட்ட காட்சிகளை பார்த்து அனைவரும் ஆச்சரியமடைந்தனர். (ந)


மணிவிழா நாளில் பணிநயந்து வாழ்த்துகின்றோம்



திரு. கணபதிப்பிள்ளை கிருஸ்ணமூர்த்தி J.P.

(B.Ed, Spl Trd. Tamil) (SLTS-1)

20.10.2022

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (தமிழ்), வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி தெற்கு.

சேவை விபரம்

கிளி/யூனியன்குளம் அ.த.க.பா- ஆசிரியர் (1996-1998)

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை (1998-1999)

கிளி/கனகபுரம் மகா வித்தியாலயம் ஆசிரியர்(2000-2003)

கிளி/சிவபாதகலையகம் அ.த.க.பா - பிரதி அதிபர் (2004-2006)

கிளி/கினாலி றோ.க.த.க.பா - பதிலதிபர் (2006-2008)

வலயக்கல்வி அலுவலகம், கிளிநொச்சி - சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் (2008-2022)

கல்வித்துறையில் பதின்மூன்று ஆண்டுகள் ஆசிரியராகவும் பதினேழு ஆண்டுகள் எம்மோடு இணைந்து சேவைக்கால ஆசிரிய ஆலோசகராகவும் மகத்தான பணியாற்றி இன்று மணிவிழாக் காணும் மணிவிழா நாயகனைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

(C-5121)

சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்கள், கிளிநொச்சி மாவட்டம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

அன்புதான் உன் பலவீனம் என்றால் இந்த உலகின் மிகச் சிறந்த பலசாலி நீதான்.
*– அன்னை தெரேசா*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அன்பின் வழியது வாழ்வே இன்ப நிலை தரவல்லது

இயற்கை எவ்வளவு அழகானது. இறைவனின் படைப்பில் எத்தனை அதிசயங்கள் ஆச்சரியங்கள்.

இருந்தும் அதனை அனுபவிக்கவும் இரசிக்கவும் நாம் பொசுப்பற்றவர்களாகி விடுவது தான் மிகப்பெரும் துரதிர்ஷ்டம்.

ஆம், மனிதப் பிறப்பின் மேன்மைபற்றி எடுத்துரைக்காத ஞானிகள் இல்லை.

இந்த உலகின் அத்தனை கண்டுபிடிப்புகளும் அருள்வாக்குகளும் எதிர்வுகூறல்களும் மனிதனால் மனிதனுக்குத் தரப்பட்டவை என்ற உண்மையை நாம் உணருவோமாயின் எங்களாலும் சாதனை படைக்க முடியும் என்ற சிந்தனை நம்மில் வலுப்பெறும்.

இதனை அடிப்படையாகக் கொண்டே மனித விழுமியங்கள் வகுக்கப்பட்டன. பண்பாட்டு அம்சங்கள் வாழ்வியலோடு இணைக்கப்பட்டன.

அன்புதான் இறைவன் என்ற உண்மை போதிக்கப்பட்டது. அன்பின் வடிவாக இருக்கக்கூடிய இறைவனை உன்னிலும் காண முடியும் என்ற உயரிய தத்துவம் மனிதன் இறைவனாக மாற முடியும் என்ற பேருண்மையை எடுத்துக் காட்டுவதாகும்.

ஆனால் இன்று இவை அனைத்தும் இழக்கப்பட்டு விட்டன.

மக்களுக்கு ஈகை செய்ய வேண்டி மன்னன் மக்களுக்குரிய சொத்தைக் கபளீகரம் செய்கின்றான்.

மக்கள் பணி செய்வதற்காக மக்களின் வரிப்பணத்தில் நியமிக்கப்பட்ட அரச சேவையாளன் மக்களுக்குத் துன்பம் இழைக்கின்றான்.

தராதரம் பார்த்து உறவு பாராட்டுகின்ற கொடுமை உச்சமடைந்துவிட்டது.

இங்குதான் மற்றவனைக் கொன்று தான் வாழ வேண்டும் என்ற சிந்தனை மேலெழுகிறது.

அதன்விளைவுதான் இன்று நம் மண்ணில் தலைவிரித்தாடும் போதைவஸ்து வியாபாரம்.

கொடுமை! தானும் தனது குடும்பமும் சுகபோகமாக வாழ்வதற்காக மற்றவனின் பிள்ளையைப் போதைக்கு அடிமையாக்கி, அந்தக் குடும்பத்தை நிர்மூலமாக்கி தான் வாழ நினைத்தபோது, இரு தரப்பின் வாழ்வும் அழிந்ததைத்தவிர வேறு எதுவும் இல்லை என்பது நிரூபணமாயிற்று.

ஆகையால் அன்புக்குரியவர்களே! இந்த உலகில் அன்பின் நிலையில் வாழ்வதுதான் ஒரே வழி.

இதனையே ***அன்பர் பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டுவிட்டால் இன்ப நிலை தானே வந்தெய்தும் பராபரமே*** என்றார் தாயுமான சுவாமிகள்.

ஆக, இன்பநிலை எதுவெனப் புரிந்து கொண்டு வாழ்வதுதான் எல்லாத் துன்பத்தையும் துறப்பதற்கான ஒரே வழி.

# புலிகள் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும்

## ஜனநாயக போராளிகள் கட்சி

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் மீதான தடையை இந்தியா நீக்க வேண்டும் என தாம் இந்தியா சென்றிருந்த வேளை கோரிக்கை விடுத்ததாக ஜனநாயக போராளிகள் கட்சியின் ஊடக பேச்சாளர் துளசி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போது இதை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மையில் ஜனநாயக போராளிகள் கட்சிக்கு இந்தியா செல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் கிட்டியது. அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் டில்லியில் பாஜகவின் முக்கியஸ்தர் ஒருவரை சந்தித்தபோது பல்வேறுபட்ட கோரிக்கையினை நாங்கள் முன் வைத்திருந்தோம்.

அந்த கோரிக்கைகள் அவரால் செவி சாய்க்கப்பட்டதோடு அதற்கு தீர்வுகள் வழங்கப்படும் என நம்புகின்றோம்.

மாகாண சபை தேர்தல் விரைவில் நடத்தப்படவேண்டும், தொல்லியல் திணைக்களத்தினால் வடக்கு கிழக்கு பகுதிகளில் தொடர்ச்சியாக பிரச்சினைகள் ஏற்படுத்தப்படுகின்றன. அவை நிறுத்தப்பட வேண்டும், கிழக்கு பகுதிகளில் இஸ்லாமிய மக்கள் தமிழர்களின் காணிகளை அபகரித்து திட்டமிட்ட குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றமை நிறுத்தவேண்டும், தேர்தல் அரசியலுக்கு வந்திருக்கின்ற விடுதலைப் புலிகளது ஜனநாயக வழிமுறைகளை ஏற்று அவர்கள் மீதான தடையினை நீக்க வேண்டும்: குறிப்பாக தென்னாசிய பிராந்தியத்தில் முக்கிய வல்லரசான இந்தியா புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டும் போன்ற கோரிக்கைகளை நாங்கள் முன்வைத்தோம்.

அத்தோடு தமிழர்களுக்கான ஒரு சமஷ்டி அடிப்படையில் தீர்வு வழங்கப்பட வேண்டும். அதற்கு 87 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையிலே கொண்டுவரப்பட்ட 13 வது திருத்த சட்டம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் எனவும் கோரினோம் என்றார். (ம-7)

# நெல் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடுகள் இல்லை

## விவசாய அமைச்சின் செயலாளர்

நெல் கொள்வனவு செய்வதற்கு நிதி ஒதுக்கீடு இல்லாததால் பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.ஆர். புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

இதற்காக கடந்த ஜூன் மாதம் அமைச்சரவை பத்திரம் ஒன்றை சமர்ப்பித்து, சிறுபோகத்திலிருந்து அரிசி கொள்வனவு செய்வதற்கு இரண்டாயிரம் மில்லியன் ரூபாவை கடனுதவியாக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்க அங்கீகாரம் பெறப்பட்டது.

அதன்படி, நெல் சந்தைப்படுத்தல் சபை, 810 மில்லியன் ரூபா செலவில் ஏழாயிரத்து 22 மெற்றிக் தொன் நெல்லை கொள்வனவு செய்துள்ளது. ஆனால் உரிய அரச வங்கியிலிருந்து இதுவரை இந்த தொகை வழங்கப்படவில்லை.

நெல் சந்தைப்படுத்தல் சபை ஊடாக நெல் கொள்வனவு செய்யப்பட்ட 810 மில்லியன் ரூபாவை செலுத்த வேண்டியுள்ளது. இதன் காரணமாக, எதிர்காலத்தில் நெல் கொள்வனவு செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, 2025 ஆம் ஆண்டளவில் நாட்டின் செத்தல் மிளகாய்த் தேவையை 100 சதவீதமாக பூர்த்தி செய்வது இலக்காகும் என விவசாய அமைச்சின் செயலாளர் எம்.பி.ஆர். புஷ்பகுமார தெரிவித்துள்ளார். நாட்டில் வருடாந்தம் ஐம்பதாயிரம் மெற்றிக் தொன் மிளகாய் தேவை காணப்படுகிறது.

தற்போது, ஐந்தாயிரம் முதல் ஆறாயிரம் மெற்றிக் தொன் வரை உள்நாட்டில் மிளகாய் உற்பத்தி செய்யப்படுகிறது. ஆரம்பகட்டமாக அடுத்த வருடம் 25 சதவீதமான உற்பத்தி இலக்கை அடைவது எதிர்பார்ப்பாகும். தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே செயலாளர் இதனைத் தெரிவித்தார்.(ம-7)

### மது போதையில் சாரத்தியம்

# வாழ்நாள் முழுவதும் வாகனம் செலுத்த தடை

மது போதையில் வானை செலுத்தி, 36 வயது பெண்ணுக்கு மரணத்தை விளைவித்த குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட 19 வயதான இளைஞர் ஒருவரின் சாரதி அனுமதிப்பத்திரத்தை வாழ்நாள் முழுவதும் தடை செய்து நீர்கொழும்பு நீதவான் சம்பிக்க ராஜபக்ஷ நேற்று உத்தரவிட்டார்.

அத்துடன், 6 குற்றச்சாட்டுகளுக்கு 199,000 ரூபாய் அபராதம் விதித்த நீதவான், விபத்தில் மரணித்த பெண்ணின் பெற்றோர் மற்றும் கணவருக்கு 2 லட்சம் ரூபாய் இழப்பீடு வழங்குமாறும் கட்டளையிட்டார்.

நீர்கொழும்பு, தலாதுவ வீதியில் 2021 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 1 ஆம் திகதி இடம்பெற்ற கோர விபத்து தொடர்பில் குற்றத்தை ஒப்புக்கொண்ட நீர்கொழும்பு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞருக்கே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (ம-7)

### மாமாவின் இறுதிக் கிரியையின் போது

# மரம் முறிந்து விழுந்ததில் மருமகன் உயிரிழப்பு

மாமாவின் இறுதிக் கிரியைகளில் கலந்து கொள்வதற்கு வந்திருந்த மருமகன், மரம் முறிந்து விழுந்து பலியான சம்பவமொன்று கம்பளை, அட்டபாகை தோட்டத்தில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இரவு சுமார் 10.45 மணியளவிலேயே இவ் அனர்த்தம் இடம் பெற்றுள்ளது.

கம்பளை - அட்டபாகை தோட்டத்தை சேர்ந்த 76 வயதான இராமகிருஷ்ணன் இயற்கை மரணம் எய்திய நிலையில், அவருக்கான இறுதிக் கிரியைகள் நேற்று நடைபெறவிருந்தன.

சடலம் அஞ்சலிக்காக அவரின் வீட்டில் வைக்கப்பட்டிருந்த நிலையிலேயே மரண வீட்டு வளாகத்தில் இருந்த மரம் முறிந்து மருமகன் மீது விழுந்ததில் அவர் உயிரிழந்துள்ளார். (ம-7)

## பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பண்பாட்டுப் பெருவிழா -2022

(யாழ்ப்பாணம்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையினால் நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை பி.ப 2 மணிக்கு பண்பாட்டுப் பெருவிழா நடத்தப்படவுள்ளது.

பண்பாட்டு பவனியானது பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தலைமை அலுவலக முன்றலில் ஆரம்பித்து பளை நகர முன்றலில் அரங்க நிகழ்வுகள் இடம்பெற ஏற்பாடாகியுள்ளது என பச்சிலைப்பள்ளி பிரதேச சபை தவிசாளர் சு.சுரேன் அறிவித்துள்ளார். (4)

# திருக்கோணேஸ்வரர் ஆலயத் திருவாசக முற்றோதல்

(யாழ்ப்பாணம்)


மாதுமையாள் சமேத திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில், நாளை மறுதினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை "திருவாசக முற்றோதல்" இடம்பெறவுள்ளது.

திருவாசக முற்றோதலில் பயின்ற ஓதுவார்கள் 076 400 8100 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

இணுவில் கந்தசுவாமி ஆலயத்தில் இருந்து நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்குப் பேருந்து புறப்பட்டு நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தை அடைந்து அங்கிருந்து 5.30 மணிக்கு புறப்படும் என அகில இலங்கை இந்து மாமன்ற செயலாளர் செ.பாலச்சந்திரன் அறிவித்தார். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஆசிரியரை இடமாற்ற வேண்டாம்" மாணவர்கள், பெற்றோர்கள் போராட்டம்



(தருமபுரம்)

கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள கோணாவில் மகா வித்தியாலயத்தில் கணிதப் பாடம் கற்பிக்கும் ஆசிரியர் ஒருவருக்கு காலம் முடியும் முன்னர் இடமாற்றம் வழங்கப்பட்டதை எதிர்த்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து கொட்டும் மழையிலும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்றை நேற்று மேற் கொண்டனர்.

இப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் கருத்து தெரிவிக்கும் போது மிகவும் பின்தங்கிய கிராமத்தில் உள்ள பாடசாலைகளுக்கு மாணவர்கள், பெற்றோர்கள், கிராம மக்கள் மற்றும் கிராமப்புற அமைப்புகளுடன் இணைந்து செயற்படகூடிய ஆசிரியர்கள் கிடைப்பது அரிது.

அவ்வாறு கிடைத்த ஆசிரியர் ஒருவரை இடமாற்றம் செய்தால் எமது பிள்ளைகளின் கல்வி பாதிக்கப்படுகிறது என தெரிவித்தனர்.

மேலும் ஆசிரியர் இடமாற்றத்தை நிறுத்தி ஆசிரியரின் இடமாற்ற காலம் வரைக்கும் எமது பாடசாலையில் கல்வி கற்பிக்க உரிய ஆவணை செய்து தரும்படியும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது அவ்விடத்துக்கு வருகை தந்த கரைச்சி கோட்டக் கல்விப் பணிப்பாளர் மற்றும் கிளிநொச்சி வடக்கு கல்வி வலயத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆகியோர் வருகை தந்து பெற்றோர்களிடமும் மாணவர்களிடமும் ஆசிரியர் இடமாற்றத்தை ரத்து செய்கிறோம் என்று உறுதிமொழி வழங்கியிருந்த நிலையில் போராட்டக்காரர்கள் அவ்விடத்திலிருந்து கலைந்து சென்றார்கள். (4-316)

# சிறுமி துஷ்பிரயோகம்; சந்தேக நபர் கைது

(அராலி)

மானிப்பாய் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கல்லுண்டாய் - நவாலி பகுதியில் 13 வயதுச் சிறுமி ஒருவரை 41வயதுடைய சந்தேக நபர் ஒருவர் தொடர்ந்து துஷ்பிரயோகம் செய்து வந்துள்ளார்.

இது தொடர்பில் அப்பகுதி மக்கள் மானிப்பாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதையடுத்து 41 வயதுடைய சந்தேகநபரை பொலிஸார் நேற்றைய தினம் கைது செய்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாரால் சிறுமி மருத்துவ பரிசோதனைகளுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (4-104)

# 2 கோடி பெறுமதியான கொக்கைன் மீட்பு

## அறுவர் கைது



(மன்னார்)

சுமார் இரண்டு கோடி ரூபாய் பெறுமதியான "கொக்கைன்" போதைப் பொருளுடன் மன்னாரை சேர்ந்த நபர் உள்ளங்களாக 6 சந்தேக நபர்களை மன்னார் மாவட்ட குற்றதடுப்பு பிரிவினர் கைது செய்துள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றதடுப்பு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் பிரகாரம் புத்தளம் நுரைச்சோலை பகுதிக்கு கடந்த திங்கட்கிழமை தேடுதல் நடவடிக்கைக்காக சென்றிருந்த போதே மன்னார் மாவட்ட குற்றத்தடுப்பு பிரிவினர் குறித்த போதை பொருளை மீட்டனர். (4-285)

# வவுனியாவில் துப்பாக்கி சூடு; சந்தேகத்தில் ஒருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா நெடுங்கேணி பகுதியில் நேற்று முன்தினம் இரவு இனந்தெரியாதவர்களால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் யுவதியொருவர் ஸ்தலத்தில் பலியாகியுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் நெடுங்கேணி பொலிஸாரால் சந்தேகத்தில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நெடுங்கேணி பகுதியில் வசிக்கும் 21 வயது யுவதி தனது வீட்டிற்கு வெளியில் வரும்போது அவர் மீதே இத்துப்பாக்கி சூடு இடம்பெற்றுள்ளது.

குறித்த சந்தேகத்தின் பேரில் ஒருவர் நெடுங்கேணி பொலிஸாரால் கைது செய்யப்பட் டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை தடயவியல் பொலிஸாரின் துணையுடன் நெடுங்கேணி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-250)

## மணல் ஏலவிற்பனை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு நிதிவான் நீதிமன்றத்தினால் அரசுடமையாக்கப்பட்ட மணல் பகிரங்க ஏலவிற்பனை நாளை மறு தினம் 22 ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு முல்லைத்தீவு நீதிமன்ற வளாகத்தில் நடை பெறவுள்ளது என நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 200 | 200 | 180 | 240 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 240 | 180 | 250 | 320 |
| தக்காளி | 300 | 300 | 320 | 350 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 180 | 220 | 200 |
| கோவா | 280 | 250 | 280 | 280 |
| கரட் | 250 | 380 | 380 | 400 |
| பூசணி | 180 | 180 | 180 | 200 |
| புடோல் | 200 | 200 | 140 | 250 |
| வாழைக்காய் | 180 | 160 | 120 | 160 |
| சின்ன வெங்காயம் | 450 | 400 | 200-500 | 600 |
| பெரிய வெங்காயம் | 260 | 250 | 230 | 300 |
| பாகற்காய் | 800 | 700 | 500 | 800 |
| வெண்டிக்காய் | 200 | 200 | 140 | 240 |
| கருணைக் கிழங்கு | 180 | 150 | 170 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 280 | 320 |
| பீற்றூட் | 260 | 250 | 230 | 300 |
| கறிமிளகாய் | 550 | 700 | 600 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 650 | 600 | 350 |
| போஞ்சி | 280 | 400 | 350 | 400 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | --- | 200 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 100 | 100 |
| தேசிக்கரய் | 600 | 600 | 600 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 85 | 40-80 | 50-80 |
| இராசவள்ளி | 250 | 300 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 450 | 400 | --- | 400 |
| முள்ளங்கி | 80 | 150 | 140 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 100 | 100 | 60 |
| வல்லாரை | 30 | 100 | 40 | 50 |
| ஈரப்பலா | 120 | 140 | 100 | 120 |


# நோபல் காகித தொழிற்சாலை பதவி நிலை வெற்றிடம்

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையில் இயங்கிவரும் காகித உற்பத்தி தொழிற்சாலைக்கு பின்வரும் பணிநிலைகட்கு தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தொழிற்சாலை மேற்பார்வையாளர்.**

- தொழிற்சாலையின் உற்பத்தியினை திறன்பட வினைத்திறனாகக் கொண்டு செல்லக் கூடிய திறமை.
- இயந்திரவியல் தொடர்பான அடிப்படை அறிவு.
- மின்னியல் தொடர்பான அடிப்படை அறிவு.

**விண்ணப்பதாரியின் தகைமை**

- சாதாரண தரத்தில் 6 பாடங்களில் சித்தி
- NVQ சான்றிதழ் அல்லது துறைசார்ந்த 3 வருடத்திற்கு குறையாத அனுபவம்.

**02. உதவி இயந்திர இயக்குநர்**

- சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தி
- NVQ சான்றிதழ் அல்லது துறைசார் 1 வருடத்திற்கு குறையாத அனுபவம்

**03. களஞ்சிய காப்பாளர்**

- சாதாரண தரத்தில் 6 பாடங்கள் சித்தி
- அடிப்படை இருப்பு பேணல் தொடர்பான அறிவு
- AAT or உயர்தரத்தில் வர்த்தகம்

**4. முகாமைத்துவ உதவியாளர்**

- கணக்கீட்டு நடைமுறைகள், முகாமைத்துவ நடைமுறைகளில் அறிவும் அனுபவமும்
- உயர்தரத்தில் இரண்டு பாடங்களில் சித்தி
- HNDA or AAT கற்றவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
- ஆங்கிலத்தில் வேலை செய்ய கூடிய திறமை.

**05.வாகன சாரதி**

- கனரக வாகன (AD Driving Licence) சாரதி அனுமதி பத்திரம்.
- frok lift, lorry செலுத்த தெரிந்து இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவி நிலைகளுக்கு கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்க விரும்பியோர் சுயவிபரக்கோவையுடன் 25.10.2022 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் ஈமெயில் விலாசத்திற்கு அல்லது கடிதம் மூலமோ கிடைக்குமாறு அனுப்பி வைக்கவும். **nnoble@gmil.com** மனித வள முகாமைத்துவ பிரிவு, நோபல் இன்ரநசினல் பேப்பர் லங்கா லிமிட்டட், கைத்தொழில்பேட்டை, அச்சுவேலி. (3191)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹெரோயினுடன்...

நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கோப்பாய் செல்வபுரத்தைச் சேர்ந்த குறித்த இளைஞனிடம் மேற்கொண்ட விசாரணையின்போது நண்பர்களிடமிருந்தே தனக்கு போதைப்பொருள் கிடைப்பதாகவும் அதேபோல் தனது கிராமத்திலும் இலகுவாக போதைப் பொருளை பெற்றுக்கொள்ள முடிவதாகவும் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக போதைப்பொருளை தான் பாவித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் விசாரணைகளின் பின் இன்றைய தினம் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளார். (ம-7,33,104)

## 17 வயது மகனை...

ளார்.

ஒப்படைக்கப்பட்ட இளைஞன் க.பொ.த சாதாரண தர பரீட்சைக்கு தோற்றிய பின் வீட்டில் இருப்பதாகவும் கடந்த 2 வருடங்களுக்கு மேலாக போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டு வருவதன் காரணமாக நேரத்துக்கு ஒழுங்காகச் சாப்பிடுவதில்லை. இரவில் தூக்கமின்மை போன்ற பல இடர்பாடுகளுக்கு முகம் கொடுத்து வரும் நிலையில் தனது மகனின் எதிர்காலம் தொடர்பில் சிந்தித்த தாய் தனது மகனை நேற்றைய தினம் கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியிடம் திருத்தி தருமாறு ஒப்படைத்துள்ளார்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட குறித்த இளைஞன் இன்றைய தினம் நீதிமன்றத்தில் பாரப்படுத்தப்படவுள்ளார். (ம-7,33,104)

## 23 வயது பெண்...

பெண் ஒருவர் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் பிராந்திய விசேட குற்றத்தடுப்பு பொலிஸார் விசேட ரோந்து நடவடிக்கையின்போது இந்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

உப பொலிஸ் பரிசோதகர் தெய்வநாயகம் மேனன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் பெண்ணை கைது செய்துள்ளனர்.

இதன்போது குறித்த பெண்ணிடமிருந்து 200 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டது.

கைது செய்யப்பட்டவர் அதே பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய குடும்ப தலைவி என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட பெண் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டு மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ம-7,33,104)

## 8 தமிழ் அரசியல்...

ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் இவர்கள் விடுதலை செய்யப்படவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வின்போதே சார்ள்ஸ் நிர்மலநாதன் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

மேலும் இதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் நீதி அமைச்சருக்கு வடக்கு கிழக்கு மக்கள் சார்பாக அவர் நன்றியும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு விடுதலை செய்யப்படுபவர்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தால் ஐந்து வருடம் முதல் 200 வருடங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்களாவர்.

விடுவிக்கப்படுவோரின் பெயர்கள், 01.வரதராஜன், 02. ரகுபதி சர்மா, 03.இலங்கேஷ்வரன், 04. நவதீபன், 05 ராகுலன், 06. காந்தன், 07. சுதா 08. ஜெபநேசன் இவர்கள் எட்டு பேரும் தீபாவளி தினத்தன்று விடுதலை செய்யப்படவுள்ளனர்.

மேலும் தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான அறிவித்தல் நீதி அமைச்சில் இருந்து தமக்கு கிடைத்துள்ளதாக சிறைச்சாலைகள் ஆணையாளரும் ஊடகப் பேச்சாளருமான சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அவர்களில் ஐவரையே விடுதலை செய்ய முடியும் எனவும், ஏனைய மூவரும் ஏற்கெனவே மேன்முறையீடு செய்துள்ளமையினால், அடுத்த கட்ட சட்ட நடவடிக்கையின் பின்னரே அவர்கள் தொடர்பிலான செயற்பாடுகள் இடம்பெறும் எனவும் சிறைச்சாலைகள் ஆணையாளர் கூறினார். (ம-7)

## கொடிகாமத்தில்...

டுள்ளது.

கொடிகாமம் சியாமளா மில் வீதியில் தனிமையில் இருந்த மூதாட்டியின் ஒன்றரைப் பவுண் தங்கச் சங்கிலியினை திருடிச் சென்ற நபரே கைது செய்யப்பட்டுள்ளார்.

உப பொலிஸ் பரிசோதகர் ராஜரத்தினம் பிரதீப் தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் குருநகர் பகுதியை சேர்ந்த 26 வயதுடைய நபர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நபர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார். அவரை சாவகச்சேரி நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-7,104)

## ஹெரோயின்...

பரிசோதகர் மதுரங்க தலைமையிலான பொலிஸ் குழுவினர் இவர்கள் மூவரையும் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 32 மற்றும் 23, 25 வயதுடைய நபர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களிடமிருந்து 50 மில்லி கிராம் 60 மில்லி கிராம் 65 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவர்கள் யாழ்ப்பாண நல்லூர் மற்றும் கொக்குவில் - குளப்பிட்டி பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,33,104)

## இலங்...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்தபோதே டொனால்ட் லூ இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சந்திப்பு நேற்றுப் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றதுடன், இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் மற்றும் அரசியல் மற்றும் பொருளாதார ஆலோசகர் சூசன் வோல்கே ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இலங்கைக்கு அமெரிக்க அரசாங்கம் தொடர்ச்சியாக வழங்கி வரும் ஆதரவைப் பாராட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அதற்கு நன்றி தெரிவித்தார்.

இந்த இக்கட்டான காலகட்டத்தில், இலங்கைக்கும் அதன் மக்களுக்கும் சகலவிதமான ஆதரவையும் வழங்க எதிர்பார்ப்பதாகவும், ஜனநாயக நிறுவனங்களை வலுப்படுத்துவதற்கும் நாடுகளுக்கு இடையில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எடுத்துள்ள முயற்சிகளைப் பாராட்டுவதாகவும் டொனால்ட் லூ தெரிவித்தார். (ம-7)

## மூளாயில்...

களவாடப்பட்டுள்ளன.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

குறித்த வீட்டில் இரண்டு வயோதிப பெண்கள் வசித்து வந்தநிலையில் அவர்கள் இருவரும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் உள்ள உறவினர் வீட்டிற்கு சென்றிருந்தனர்.

மட்டக்களப்பு சென்றவர்கள் நேற்று வீட்டிற்கு திரும்பி வந்து பார்த்தவேளை 2 தொலைக்காட்சி பெட்டிகள் உள்ளிட்ட மேலும் பல இலத்திரனியல் உபகரணங்கள் களவாடப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம்குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ம-7,33,104)


தன நிதானய
திகதி - 2022.10.19
சீட்டிழுப்பு இலக்கம் - 943
S 51 56 61 74

மஹஜன சம்பத
திகதி 2022/10/19
சீட்டிழுப்பு இலக்கம் 4913
S 6 9 8 8 9 5

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 222
ரிஷபம் 06 22 34 44 ரிஷபம்

மெகா பவர்
திகதி 19/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1261
B 14 31 61 71 75

கொவிசெத
திகதி 2022.10.19
சீட்டிழுப்பு இலக்கம் 3155
T 31 34 75 77

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 19/10/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1368
மீனம் 2 5 4 2 3 7

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1888
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.10.19
தினம் புதன்கிழமை
Q 09 23 40 45
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,460,740/-

சனிதா
புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.10.19
சீட்டிழுப்பு இல : 4049
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,188,740/-
வெற்றி இலக்கங்கள் 01 11 48 72 I

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 4,669,404.20
புதன்கிழமை
திகதி 2022-10-19
வெற்றி வாரம் 3600
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 05 08 25 26 கன்னி
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,488,200/-

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
D 26 11 52 55 57
சீட்டிழுப்பு வாரம் 1064
வர்ணம் பச்சை
திகதி 2022.10.19 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 270,672,707.80
தொலைபேசி 011-2 333 546-47
Web : www.dlb.lk

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1863
சீட்டிழுப்பு திகதி 2022-10-19
வெற்றி இலக்கங்கள் 32 38 60 69 M
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 36,406,424/-
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1714
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.10.19
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,817,540/-
வெற்றி இலக்கங்கள் 23 27 36 70 M


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



மலர்வு
23 - 03 - 1942

உதிர்வு
20 - 09 - 2022

## சின்னத்தம்பி குணசிங்கம்

திதி - நிர்ணய வெண்பா

ஆண்டு சுபகிருது புரட்டாதித் திங்கள்
வெண்மதி தேய்பிறைத் தசமித் திதிதனில்
மாண்பார் குணசிங்கம் இறைதாள் பற்றியே
விண்ணுலக சுவர்க்கம் புகுந்தார் மகிழ்ந்து

077 640 7370

(13157)

தகவல்
குடும்பத்தினர்

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் ஒட்டுமடத்தில் 30 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

- ஒட்டுமடம் சந்தியிலிருந்து அராலி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன் (காரைநகர் செல்லும் பிரதான காபெட் வீதி)
- யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்டது.
- 2 பரப்பாகவும் 3 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- யாழ்.பஸ் நிலையத்திலிருந்து 1½km தூரம்.
- பார்வையிடும் நேரம் :- காலை 6.00 - மாலை 6.00

(13108)

தொடர்பு

**077 911 6983**
**076 755 8606**

அன்பான வாடிக்கையாளருக்கு

மகிழ்ச்சியான செய்தி

# கொழும்பு விலையில் யாழ். நகரில்

உங்களுக்குத் தேவையான அனைத்து வகையான பொருட்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

சில வருட காலமாக இயங்கிவரும் ஸ்தாபனத்தில் இன்றுமுதல் விசேட விலைக்கழிவில் பெற்றுக் கொள்ளலாம்.

மொத்தக் கொள்வனவிற்கு 10% கழிவு

பான்ஸிப் பொருட்கள், சில்வா் பொருட்கள்,
பை (Bag) வகைகள், கிளாஸ் வகைகள்,
மாபிள் வகைகள், பிளாஸ்ரிக் பொருட்கள்,
பாதணி வகைகள், முகக் கவசங்கள் (Mask),
அன்பளிப்புப் பொருட்கள், விளையாட்டுப் பொருட்கள்,
மணிக்கூடுகள், குடை, மழைக்கவசங்கள்,
தையல் உபகரணங்கள், பாடசாலைப் பொருட்கள்,
கவரிங் பொருட்கள், அழகுசாதனப் பொருட்கள்

**சரவணபவன் பான்ஸி ஹவுஸ்**

இல. 26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன்,
( செம்மா தெரு ஒழுங்கை )
யாழ்ப்பாணம்.

(13106)

உரிமையாளர் - தே. கலைத்தாசன் (கரன் )

**021 315 5900, 077 468 3354**

## 6 அத்தியாவசிய...

இந்த விலை குறைப்பு நேற்று (புதன் கிழமை) முதல் அமுலுக்கு வரும் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் இந்த பொருட்களை நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து லங்கா சதொச விற்பனை நிலையங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் நிறுவனம் அறிவித்துள்ளது.

இதற்கமைய, ஒரு கிலோ பூண்டு 60 ரூபாயால் குறைக்கப்பட்டுள்ளது. அதன்படி ஒரு கிலோ பூண்டின் புதிய விலை 490 ரூபாய் என அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.ஒரு கிலோ ரொட்டி மாவு 55 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளது. இதன்படி 375 ரூபாயாக இருந்த ஒரு கிலோ மாவின் புதிய விலை 320 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ கடலைப் பருப்பின் விலை 30 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், புதிய விலை 285 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு கிலோ வெள்ளைச் சீனியின் விலை 15 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 260 ரூபாய் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ வெள்ளை அரிசியின் விலை 5 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 169 ரூபாய் எனவும் அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.1,500 ரூபாயாக இருந்த ஒரு கிலோ நெத்திலியின் விலை 50 ரூபாயினால் குறைக்கப்பட்டுள்ளதுடன், அதன் புதிய விலை 1450 ரூபாய் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (13163)

076 825 7716 (ஆகாஸ்)

**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-4921)

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீடிப்பு செய்து தரப்படும்

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777

**அமெரிக்க லொத்தர் இலவச விசா**

இலவசமாக குடும்பத்துடன் நிரந்தரமாக அமெரிக்காவில் குடியேற இரண்டு வாய்ப்புக்கள்

Passport அவசியமில்லை

55'000 விசா
இலங்கையர்களுக்கு அதிக வாய்ப்புக்கள்

நீங்கள் தவறவிடும் ஒவ்வொரு கணமும் இன்னொருவருக்கான விசா வாய்ப்பாக அமையும்

இதுவரை எமக்கூடாக விண்ணப்பித்த நூற்றுக்கணக்கானோர் அமெரிக்கா சென்றுள்ளார்கள்

ஏமாற்றங்களை தவிர்க்க உடனே பதியுங்கள்

18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்

இந்த வருடம் எடுக்கிறவர்களும் விண்ணப்பிக்கலாம் A/L

வெளிநாட்டு உதவி இல்லாதவர்களுக்கும் வெளிநாடு செல்ல காசு இல்லாதவர்களுக்குமான ஒரே ஒரு அரியசந்தர்ப்பம்

எமது V2 Travels and Tours எமது Facebook பக்கத்தில் பார்வையிடலாம். (C-4921)

V2 Travels 0768226240 0768226244


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.10.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org